# மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கூட்டுறவு வார விழாப்பேருரை...

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இல்லாமை இல்லாத நிலை தமிழகத்தில் உருவாக்கித் தந்து மக்களாட்சி நடத்தி நம்மை எல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு வங்கக் கடலோரம் சந்தனப்பேழையில் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. புன்னீர்செல்வம் அவர்களின் வாழ்த்துக்களுடன் திருவண்ணாமலை மாவட்ட அளவிலான 66-வது கூட்டுறவு வார விழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இன்றியமையாப் பங்கினை ஆற்றி வருகிறது. கூட்டுறவுத் துறை மூலமாக கடன் வழங்குதல், விவசாய விளைபொருட்கள் விற்பனை மேற்கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் இடுபொருள், நுகர்பொருள் ஆகியவற்றை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு பொதுமக்களின் தேவைகளை சிறந்த முறையில் நிறைவு செய்யவும், கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான அளவிற்கு பங்காற்றவும் ஏதுவாக கூட்டுறவுகளை நவீன மயமாக்கி வலிமைபடுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் கூட்டுறவில் ஜனநாயக் கோட்பாடு என்பது பல ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்வு மேம்பட "கூட்டுறவு இயக்கத்தை" நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. திருவள்ளூர் மாவட்டம், திரூரில் 1904-ம் ஆண்டு முதல் வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டது. ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவுத் துறை முக்கிய பங்காற்றி வருகிறது. "கூட்டுறவே நாட்டுயர்வு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற முது மொழிக்கேற்ப, தமிழ்நாட்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் குறிப்பாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெரு விவசாயிகள், சாமான்ய மக்கள் மற்றும் இதர பிரிவினர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் அனைத்து பிரிவுகளிலும் அபரிதமான வளர்ச்சியை கண்டுள்ளது.

இந்தியா முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு வார விழா நவம்பர் 14-ம் தேதி முதல் நவம்பர் 20-ம் தேதி வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் குறித்து பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 66-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா “புதிய இந்தியாவில் கூட்டுறவுகளின் பங்கு” என்ற பிரதான பொருளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 66-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில், பயிர் கடனாக 1007 நபர்களுக்கு ரூ.7.30 கோடி மதிப்பிலும், மகளிர் குழு கடனாக 390 குழுக்களுக்கு ரூ.18.04 கோடி மதிப்பிலும், முதலீட்டுக் கடனாக 340 நபர்களுக்கு ரூ.1.78 கோடி மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் கடனாக 117 நபர்களுக்கு ரூ.42.25 இலட்சம் மதிப்பிலும், ஆக மொத்தம் 1854 பயனாளிகளுக்கு ரூ.27.54 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, ஒரு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, ஒரு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், மாவட்ட கூட்டுறவு அச்சகம், ஒரு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், 4 நகர கூட்டுறவு வங்கிகள், 157 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 3 கூட்டுறவு பண்டக சாலை, 8 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, 7 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், 2 மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கம், 41 பணியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஒரு கூட்டுறவு அருந்தகம், என மொத்தம் 228 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கீழ்பென்னாத்தூர் கிளைக்கு ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய சொந்த கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், 12 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தலா ரூ.20.00 இலட்சம் வீதம் மற்றும் 2 தொடக்க கூட்டுறவு பண்டக சாலைக்கு தலா ரூ.28.00 இலட்சம் வீதம் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

போளூர் மற்றும் செங்கம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு முறையே ரூ.38.00 இலட்சம் மற்றும் ரூ.31.00 இலட்சம் மதிப்பிலும், திருவண்ணாமலை, செங்கம் மற்றும் போளூர் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு முறையே ரூ.44.55 இலட்சம், ரூ.40.00 இலட்சம், ரூ.37.11 இலட்சம் மதிப்பில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

செய்யார் மற்றும் வந்தவாசி கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ரூ.5.10 இலட்சம் செலவில் பாதுகாப்பு கதவுடன் புதிய பாதுகாப்பு அறை கட்டப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவ மொத்த விற்பனை பண்டக சாலைக்கு ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தொழில் பிரிவுடன் கூழய அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

ஜவ்வாது லேம்ப் கூட்டுறவு சங்கத்தில் சாமை அரவை இயந்திரம் ரூ.1.50 இலட்சம் மதிப்பிலும், புளி பதனிடும் இயந்திரம் ரூ.16 ஆயிரம் மதிப்பிலும், தேன் பதனிடும் நிலையம் ரூ.2.81 இலட்சம் மதிப்பிலும், நம்மியம்பட்டு லேம்ப் கூட்டுறவு சங்கத்தில் புளி பதனிடும் இயந்திரம் ரூ42 ஆயிரம் மதிப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 10 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 5 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் தலா ரூ.54 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.8.10 இலட்சம் செலவில் சிசிடிவி கேமிரா நிறுவப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, ஒரு கூட்டுறவு விற்பனை சங்கத்தில் தலா ரூ.2.84 இலட்சம் வீதம் தனி நபர் பாதுகாப்பு பெட்டகமும், ரூ.2.90 இலட்சம் செலவில் தனி நபர் பாதுகாப்பு பெட்டகமும் தமிர்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி திருவண்ணாமலை கிளையில் ரூ.2.84 இலட்சம் செலவில் பாதுகாப்ப கதவும், ரூ.2.90 இலட்சம் செலவில் தனி நபர் பாதுகாப்பு பெட்டகமும் நிறுவப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை மற்றும் ஆரணி நகர கூட்டுறவு வங்கிகள், திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் திருவண்ணாமலை மற்றும் செய்யார் கிளைகள், ஆகியவற்றில் தலா ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.10.00 இலட்சம் செலவில் ரூபாய் நோட்டு பிரிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 157 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 7 கூட்டுறவு விற்பனை சங்கங்களில் 285 உணவு தானிய சேமிப்ப கிடங்குகள் ரூ.33.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2018-2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரின் போது சட்டமன்ற விதி 110-ன் கீழ் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் 13 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு நவீன வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளுடன் கூடிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து தலா ரூ.20.00 இலட்சம் வீதம் வட்டியில்லாக் கடனாக ரூ.2.60 கோடி செலவில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இரண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை நவீன மயமாக்க தலா ரூ.20.00 இலட்சமும், 5 கூட்டுறவு நிறுவனங்களில் வணிக வளாகம் கட்ட ரூ.1.50 கோடியும், 10 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் சூரிய மின்கலன் அமைக்க ரூ.40.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளைகள் தேவிகாபுரம், கீழ்கொடுங்காலூர் ஆகிய இடங்களில் நிறுவ ஆணை வழங்கப்பட்டு புதிய கிளைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பிரதான கிளையில் **ATM** வசதி துவக்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் பயிர் கடன் பெறுவதை எளிமையாக்கும் வகையில் விவசாயிகளுக்கு **KCC** ரூபே அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2019-2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரின் போது சட்டமன்ற விதி 110-ன் கீழ் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் 10 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு நவீன வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளுடன் கூடிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து தலா ரூ.25.00 இலட்சம் வீதம் வட்டியில்லாக் கடனாக ரூ.2.50 கோடி அனுமதிக்கப்பட்டு அலுவலக கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 5 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 3 கிளைகளில் சூரிய ஒளி மின்கலன்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பிரதம கூட்டுறவு பண்டக சாலை மூலம் 6 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் 4 அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு 15% தள்ளுபடி விலையில் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.38.57 இலட்சம் மதிப்பில் தரமான மருந்துகள் விற்பனை செய்யப்படுள்ளது.

காய்கறி விலை அதிகரித்து கொண்டு வருவதை கட்டுப்படுத்தும் நோக்கிலும் நுகர்வோருக்கு ஏற்ற வகையில் தரமானதாகவும், புதியனவாகவும், விற்பனை செய்ய ஏதுவாக மாண்புமிகு அம்மாவின் அரசால் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மூலம் திருவண்ணாமலையில் ஒரு பண்ணை பசுமை நுகர்வோர் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. தற்போது பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் வெளிச்சந்தை விலையைவிட குறைவான விலையில் தரமான வெங்காயம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் வட்டாரத்தில் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் ஜவ்வாதுமலை மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் பழங்குடியின மக்களிடமிருந்து சாமை, புளி மற்றும் தேன் ஆகிய விளை பொருட்களை கொள்முதல் செய்து பதப்படுத்தி, சுத்திகரித்து, பாக்கிங் செய்து பொது வணிக முத்திரையுடன் தரமான பொருட்களை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் பொருட்களை சங்கமே நேரடியாக கொள்முதல் செய்வதால் இடைத் தரகர் தலையீடு இன்றி மலைவாழ் மக்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கப்பெற்று பயனடைந்து வருகின்றனர்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் விவசாய பெருமக்களின் விளை பொருட்களுக்கு ஆதாய விலை கிடைக்கும் வகையில் அப்பொருட்களை பாதுகாத்து வைக்கவும், தான்ய ஈட்டுக் கடன் வாங்கவும், முழுவதும் மான்ய அடிப்படையில் 100 மெட்ரிக் டன், 500 மெட்ரி டன், 1000 மெட்ரிக் டன் மற்றும் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 285 கிடங்குகள் ரூ.33.38 கோடி மதிப்பில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தானிய ஈட்டுக் கடன் 4098.37 மெட்ரிக் டன் அளவிற்கு ரூ.7.44 கோடி வாடகை மூலம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் 159 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவ கடன் சங்கங்கள், 5 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் 2 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் பொது சேவை மையங்கள் அமைக்கப்பட்டு கிராமப்புற பொது மக்களுக்கு தேவையான வருவாய்த் துறை, சமூக நலத் துறை சான்றிதழ்கள் மற்றும் இதர இணைய வரி சேவைகள் வழங்கப்படுகிறது. இப்பொது சேவை மையங்கள் மூலம் ரூ.91.16 இலட்சம் அளவிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 25,699 எண்ணிக்கைக்கு சேவைகள் வழங்கப்பட்டு நிகர வருமானம் ரூ.44.70 இலட்சம் அளவிற்கு ஈட்டப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் மருத்துவ பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு தேவையான சேவைகள் வழங்கப்படுகிறது. இம்மையங்கள் மூலம் 4850 விவசாயிகள் பயனடைந்துள்ளனர், ரூ.1.10 இலட்சம் அளவிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாய வேலையாட்கள் பற்றாக் குறையினை களைய 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.4.01 கோடி மதிப்பில் உழவு இயந்திரம், டிராக்டர், மினி டிராக்டர், பயிர் நடவு இயந்திரம் மற்றும் இதர கருவிகளுடன் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. இதன் மூலம் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு ரூ.2.76 இலட்சம் அளவிற்கு சங்கங்களுக்கு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2011 முதல் 2016-ம் ஆண்டு வரையிலான காலத்தில் குறுகிய கால பயிர்கடனாக 3,88,676 நபர்களுக்கு ரூ.1454.03 கோடியும், மத்திய கால கடனாக 20,476 நபர்களுக்கு ரூ.89.51 கோடியும், மகளிர் சுய உதவி குழுக்களின் 21,308 உறுப்பினர்களுக்கு ரூ.365.76 கோடியும், 1170 பணிபுரியம் மகளிருக்கு ரூ.3.11 கோடியும், 1931 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.4.84 கோடியும், 1723 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5.59 கோடியும், டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 16,196 நபர்களுக்கு ரூ.32.17 கோடியும், டாம்கோ திட்டத்தின் கீழ் 2604 நபர்களுக்கு ரூ.7.25 கோடியும், 28,107 சிறு வியாபாரிகளுக்கு ரூ.29.89 கோடியம், 155 நபர்களுக்கு வீட்டுவசதி மற்றும் வீடு அடமான கடனாக ரூ.4.70 கோடியம், பண்ணை சாரா கடனாக 264 நபர்களுக்கு ரூ.4.60 கோடியும், தான்ய ஈட்டு கடனாக 5222 நபர்களுக்கு ரூ.27.02 கோடியும், நகைக் கடனாக 11,75,622 நபர்களுக்கு ரூ.3845.88 கோடியம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2016 முதல் 2019 ஆம் ஆண்டு ஆக்டோபர் வரையிலான காலத்தில் குறுகிய கால பயிர்கடனாக 2,87,339 நபர்களுக்கு ரூ.1467.46 கோடியம், மத்திய கால கடனமாக 7002 நபர்களுக்கு ரூ.34.98 கோடியும், 14,447 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.337.96 கோடியும், 675 பணிபுரிபும் மகளிருக்கு ரூ.3.14 கோடியம், 6872 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.17.17 கோடியம், 1490 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5.60 கோடியும், 14,197 சிறு வியாபாரிகளுக்கு ரூ.21.52 கோடியும், 175 நபர்களுக்கு வீட்டுவசதி மற்றும் வீடு அடமான கடனாக ரூ.4.72 கோடியும், பண்ணை சாரா கடனாக 59 நபர்களுக்கு ரூ.1.07 கோடியும், தான்ய ஈட்டு கடனாக 5381 நபர்களுக்கு ரூ.27.08 கோடியும், நகைக் கடனாக 4,04,555 நபர்களுக்கு ரூ.1502.59 கோடியம் கடனாக வழஙகப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் கணிணி மயமாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பொது விநியோக திட்டத்தின் கீழ் 01.06.2011 முதல் ஏழை எளிய மக்களின் பசிப்பிணியை அகற்றும் வகையில் 6.62 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் 1112 முழு நேர நியாய விலைக் கடைகள், 510 பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடைகள், 8 மகளிர் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் 3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணம் நியாய விலைக் கடைகளில் விற்பனை முனைய கருவி (**Point of Sale**) மூலம் அத்தியாவசியப் பொருட்கள் 6.62 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெளிச் சந்தையில் பருப்வு மற்றும் எண்ணெய் விலை உயர்ந்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை குறைந்த விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

மக்களின் எண்ணங்களை அறிந்து திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசுக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

---000---